அந்த மருத்துவ மனைக்கு அண்மைக் காலத்தில், 6 மாதத்திற்கு முன்னால் நான் சென்று பார்வையிட்டு, சில யோசனைகளைத் தெரிவித்துவிட்டு வந்து இருக்கிறேன். அங்கேயிருக்கும் மருத்துவர்கள் நல்ல திறமைசாலிகளாக இருக்கிறார்கள். அதை மேலும் விரிவுப்படுத்த என்ன செய்யலாம் என்பது பற்றி பின்னர் பரிசீலிக்கலாம்.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை காசநோய் மருத்துவமனை, அமைந்திருக்கிற இடம் பெரியார் மாவட்டத்தில் இருக்கிற காரணத்தால், பெரியார் மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அதற்குத் தலைவராக இருப்பது தான் பொருத்தமுடையதாகவும், நியாயமானதாகவும் இருக்கும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஒன்று தான். ஆகவே, பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்குத் தலைவராக இருப்பதற்கு வழிவகை செய்யப்படுமா? நிர்வாகக் குழுவில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்கள் பெரியார் மாவட்டத்தில் இருக்கிற ஆட்சித் தலைவர் அதற்குத் தலைவராக இருப்பதற்கு உடன்பட வில்லை என்பதால் இப்படி வைத்திருக்கிறார்களோ என்ற தவறான கருத்து ஏற்படுவதற்கு இடம் ஏற்படும். ஆகவே, பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் தான் அதற்குத் தலைவராக இருப்பார் என்கிற வகையில் விதிமுறை களில் ஒரு எளிய திருத்தத்தின் மூலம் செய்து, அதை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுப்பிய கேள்வியை ஏற்கனவே திரு. நல்லப்பன் அவர்களும் கேட்டார்கள், அந்த நேரத்தில் நான் அளித்த பதில் (Societies Registration Act 21 of 1960) அடிப்படையில் அதைத் திருத்தவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லப்பன் அவர்களும் தெரிவித்த அந்தக் கருத்துக்களின் அடிப்படையில், அந்த யோசனையை அரசாங்கம் நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Centralised purchase system for purchase of drugs.

* Q. 352—DR. K. P. RAMALINGAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) Whether there is any proposal for creating common centralised purchase system for purchasing Drugs and Medicines for the Government Hospitals and Dispensaries?

(*b*) If so, the details thereof?

1982 மார்ச் 4]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அரசாணை நிலை எண் 584 சுகாதாரம், நாள் 4—4—1981-ல் மருத்துவக் கல்வி இயக்குநர் இயக்ககத்திலும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநல இயக்குநர் இயக்ககத்திலும் மருந்து வாங்கும் முறையை மையப்படுத்த அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது ஏப்ரல் 1982 முதல் அமுலுக்கு வரும். இவ்வாணைப்படி மருந்துகள் வாங்குவதற்கு உதவி செய்ய மருந்து வாங்கும் குழு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இம்முறையினால் மருந்துகள் மொத்தமாக இயக்ககங்களினால் வாங்கப்பட்டு அனைத்து மருத்துவ நிறுவனங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் சீராக வினியோகம் செய்யப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, மருந்து வாங்கும் குழு அமைத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவிலே யார் யார் இடம் பெற்று இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்துகள் வாங்குவதற்கு உதவி செய்ய 'பர்சேஸ் கமிட்டி' ஒன்று நியமித்து இருக்கிறோம். இதுவரையில், அந்தந்தத் துறைக்குத் தேவையானதை அவர்கள் மனு செய்து பெற்று வந்தார்கள். அதாவது, மருத்துவக் கல்வி இயக்குனராக இருந்தால், அவர் தனியாக மனு செய்து மருந்துகள் வாங்குவார். டி.எம்.எஸ். துறையாக இருந்தால் அவர் தனியாக மனு செய்து மருந்துகள் வாங்குவார். ஆனால் இப்போது இத்துறைகளுக்காக ஒரு 'சென்ட்ரல் பர்சேஸ் கமிட்டி' நாம் நியமித்து இருக்கிறோம். அந்தக் கமிட்டியில்

Director of Medical Education

Director of Medical Services & Family Welfare

Director of Public Health and Preventive Medicine

Director of Primary Health Centres

Joint State Drug Controller

என்று ஐந்து துறையைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதற்கு சேர்மனாக டைரக்டர் ஆப் மெடிகல் சர்விசஸ் ஒரு ஆண்டும், டைரக்டர் ஆப் மெடிகல் எடுகேஷன் ஒரு ஆண்டும், மாறிமாறி வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவரவர்களே, இந்த முறையிலே கால்நடை மருத்துவமனைகளுக்கும் மற்ற மருத்துவமனைகளுக்கும் சம்பந்தம் இருக்கிறதா ? கால்நடை மருத்துவமனைகளுக்கு வாங்கப்படுகிற மருந்து களுக்கும் இந்த மத்திய பர்ச்சேஸ் முறை கையாளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இல்லை.

துவரங்குறிச்சியிலுள்ள மகப்பேறு மருத்துவமனைக் கட்டிடம்.

* வினா எண் 353.—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஒன்றியம் துவரங்குறிச்சியில் மகப்பேறு மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டு பின் அது தடை செய்யப் பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) மேற்கூறப் பட்ட கட்டிடம் கட்ட அரசு ஆணை பிறப்பித்த பின்பு, கட்டிடம் கட்ட ஏற் பட்ட தடைகளை நீக்கி கட்டிடங்கள் யாவும் கட்டி முடிக்க 11—1—1982 நாளிட்ட மக்கள் நல்வாழ்வுத்துறை அரசாணை எண் (நிலை) 40-ல், ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. மே. அ. இராசகுமார் : தலைவரவர்களே, இந்தத் தடையைப் பெறுவதற்கு அரசு அதிகாரிகளே முன்வந்திருப்பதால், அந்த அரசு அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்தத் தடைக்கு காரணம் என்னவென்றால் அது ஒரு கோவில் நிலம். 'ஹிந்து ரிலிஜியஸ் அண்ட் சாரிட்டபிள் எண்டோமென்ட்' டிபார்ட்மென்டைச் சேர்ந்த ஒரு கோவில் நிலம் அது. அதை ஆர்ஜிதம் செய்யக்கூடிய நேரத்தில் இரண்டு துறைகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, பின்னால் சுமூகமாகத் தீர்க்கப் பட்டு, இப்போது ஆணை பிறப்பிக்கப்பட்டு, வேலை தொடங்க ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.